Thiru K. VINAYAKAM : Though on the point that the hut dwellers caused pollution to the drinking water supplied by the Corporation there is no difference of opinion, after de-housing them, after demolishing the huts, were they given alternative sites anywhere to enable them to live or are they shifting from place to place and just continuing the pollution of the drinking water?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொதுவாக அருகிலே உள்ள வேறு இடங்களிலே அவர்களுக்கு இயலுமானால் இடம் தரப்படுகிறது. ஹவுசிங் போர்டு மூலமாகவும் தேவையான இடத்தை ஒதுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகாவிலிருந்து வந்த உத்திரவு அமைச்சர் அவர்களுடைய செயற்குறிப்பில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த உத்திரவு அஸிஸ்டெண்ட் கார்ப்பரேஷன் கமிஷனர் இடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவு எண் 67197-பி2/69—1 தேதி 24—7—1969, எ. எஸ். பதமநாபன், டெபுடி செகரட்டரி என்று கையெழுத்திட்டுள்ள அந்த உத்தரவையும் பொருட்படுத்தாமல் நடவடிக்கை அந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் எடுத்திருக்கிறார் என்று சொன்னால் இது சட்டபூர்வமான நடவடிக்கை என்று சொல்ல முடியுமா? அரசாங்க அதிகாரிகளே ஸ்டே உத்தரவை மீறி நடவடிக்கை எடுத்தால் மற்றவர்களுக்கும் அப்படிப்பட்ட சட்டவிரோதச் செயலைச் செய்ய ஊக்கம் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது ஆகாதா? அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தேதி என்ன சொன்னீர்கள்?

திரு. சி. கோவிந்தராஜன் : 24—7—1969 அன்று.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை விசாரித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Rajaji market at Kancheepuram.

* 607 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Kancheepuram Municipality has suffered losses in running Rajaji market in 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1968–69-ம் ஆண்டில் நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக மொத்தம் ரூ. 1,08,860 வசூலிக்கப்பட்டது. வசூல் பணியாளர்களுக்காக ஏற்பட்ட மொத்தச்செலவு ரூ. 18,159 ஆகும். ஏலத்தில் கேட்கப்பட்ட அதிக அளவுத் தொகை ரூ. 93,100 ஆகும். வசூலையும் குத்தகைக்கு விட்டிருப்பின், குத்தகைக்காரர் துப்புரவுச் செலவுக்காக நகராட்சிக்கு ரூ. 6,118 செலுத்தியிருப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)